Aerospace university in State

| Pub Date: | 02 Dec 2015 | Publication: | Dina Thanthi | Edition: | Bangalore |
| --- | --- | --- | --- | --- | --- |
| Journalist: | Bureau | Language: | Tamil | Page No.: | 4 |
| CCM: | 29.97 | MAV: | 23973.43 | Circulation | 242848 |




# பெங்களூருவில் விமானவியல் பல்கலைக்கழகம்

## மந்திரி ரோஷன் பெய்க் தகவல்

பெங்களூரு, டிச.2– பெங்களூருவில் விமானவியல் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று மந்திரி ரோஷன் பெய்க் கூறினார்.

### கண்காட்சி

இந்திய விமானவியல் மற்றும் பாதுகாப்பு கண்காட்சி பெங்களூருவில் நேற்று தொடங்கியது. இந்த கண்காட்சியை செய்தி மற்றும் மக்கள் தொடர்பு, உள் கட்டமைப்புத்துறை மந்திரி ரோஷன் பெய்க் தொடங்கி வைத்து பேசியதாவது:–

கர்நாடகம் விமானவியல் துறையின் தலைநகரமாக விளங்குகிறது. நாட்டிலேயே கர்நாடகம் தான் மிக சிறப்பான விமானவியல் கொள்கையை உருவாக்கியுள்ளது. பெங்களூரு தேவனஹள்ளி அருகே 1,000 ஏக்கர் பரப்பளவில் சிறப்பு பொருளாதார மண்டலம் அமைக்கப்படுகிறது.

### விமானவியல் பல்கலைக்கழகம்

இதில் விமானவியல் பல்கலைக்கழகம் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த கொள்கை, தொழில் துறை வளர்ச்சி அடைய உதவும். ஒற்றைசாளர முறையில் தொழில் தொடங்க உரிமம் வழங்க. உயர்மட்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. தொழில் துறை வளர்ச்சிக்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க அரசு தயாராக உள்ளது.

இவ்வாறு ரோஷன் பெய்க் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில், உள்கட்டமைப்புத்துறை செயலாளர் வந்திதா சர்மா உள்பட பலர் கலந்து கொண்டனர். நேற்று தொடங்கிய கண்காட்சி இன்றும் (புதன்கிழமை) நடைபெறுகிறது.